அ.வ.எண்: 104/2014 நாள்: 08.10.2025

வா.சா.3 – பெருமாள்

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>2, 4, 6 முதல் 8 பிரதிவாதிள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. நான் வாதியுடைய மகன். எனக்கு சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததா என்றால் இல்லை என் தந்தை தான் சாட்சியமளிக்கும்படி சொன்னார். தாவா சொத்தில் எனக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியம் உள்ளதா என்றால் உண்டு. என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் ஒரு சகோதரன் மற்றும் சகோதரி ஆவர். அவர்களுக்கு தாவா சொத்தில் பாத்தியம் உள்ளதா என்றால் உள்ளது. நான் எனது நிரூபன வாக்குமூலத்தில் தாவா சொத்து சம்பந்தமாக சொல்லியுள்ள தகவல்கள் அனைத்தும் என் தந்தை சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தின் தேதி தெரியுமா என்றால் 21.12.1958.
2. மேற்படி கிரைய பத்திரத்தில் எத்தனை லக்க சொத்துக்கள் உள்ளது என்றால் 2 இலக்க சொத்துக்கள் உள்ளது. மேற்படி கிரைய பத்திரத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும் என் தகப்பனார் சொல்லி தான் தெரியும் என்று சொன்னால் சரிதான் நான் 1973 ஆம் ஆண்டு பிறந்தேன். அதற்கு முன்பு தாவா சொத்து சம்பந்தமான நடவடிக்கைகள் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான் ஆனால் தந்தை

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.08 15:14:41 +0530

கூறியுள்ளார். தற்போது தாவா சொத்தின் பட்டா எண் என்றால் 320 ஆகும் மேற்படி பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன் அதை நான் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பட்டா எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இரண்டாவது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. (சாட்சியிடம் வாசாஆ.2 ஆவணம் காட்டப்பட்டது) மேற்படி ஆவணம் பட்டா இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி பட்டாவானது தற்போது 3வது பிரதிவாதியின் பெயரில் உள்ளது தெரியுமா என்றால் தெரியும் ஆனால் அது மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது. என்ன மோசடி செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் பட்டாவை மோசடியாக செய்துள்ளார்கள் மேற்படி பட்டாவை எப்பொழுது மோசடியாக உற்பத்தி செய்தார்கள் என்று தெரியுமா என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை. தற்போது தாவா வழக்கு தாக்கல் செய்துள்ள சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மோசடியான பட்டா சம்பந்தமாக நான் நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் ஊரில் பஞ்சாயத்து பேசினோம் ஆனால் அதற்கு கட்டுப்படாததால் தாவா வழக்கை தாக்கல் செய்தோம்.

4. மேற்படி மோசடி பட்டா சம்பந்தமாக நான் வருவாய்த் துறையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை குறித்து எனக்கு தெரியுமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் எந்த தேதியில் அக்கிரமப்பிரவேசம்

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.08 15:14:49 +0530

செய்ய முயற்சித்தார்கள் என்றால் 21.08.2014 ஆம் தேதி முயற்சித்தார்கள். மேற்படி வாசாஆ.1 ஆவணம் கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள மற்ற சொத்துக்களுக்கான பட்டா என் தகப்பனார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை நாங்கள் அனுபவம் செய்வதற்கு என்ன ஆவணம் உள்ளது என்றால் என் தந்தை பெயரில் கிரைய பத்திரம் உள்ளது மேலும் வரி ரசீதுகள் அவர் பெயரில் உள்ளது.

5. மேற்படி வரி ரசீதுகள் வாசாஆ.2 ஆக உள்ளது என்றால் சரிதான் மேற்படி வரி ரசீதில் உள்ள பட்டா எண்ணிற்கு எத்தனை சொத்துக்கள் கட்டுபட்டுள்ளது என்றால் மொத்தம் பத்து சொத்துக்கள் கட்டப்பட்டுள்ளது. மேற்படி வரி ரசீதுகளில் உள்ள 10 இலக்க சொத்துக்களில் தாவா 2 இலக்க சொத்துக்களை தவிர மற்ற சொத்துக்களுக்கு என் தந்தை பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாசாஆ.2 ஆவணங்களுக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் இரண்டும் பட்டா எண் 320 ல் கட்டுப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஓ.எஸ் 125/1966 மற்றும் இ.பி 381/1966 ல் இ.ஏ 144/1968 ன் மூலம் 3ம் பிரதிவாதியின் கணவர் 1ம் பிரதிவாதியால் நீதிமன்ற ஏலத்தில் எடுக்கப்பட்ட பிறகு தாவா சொத்துக்கள் ஆனது என் தகப்பனார் பெயரில் எந்த காலத்திலும் இல்லை என்றும் அதை நாங்கள் அனுபவம் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு விவரம் தெரிந்த காலம் முதல் அதில் விவசாயம் செய்கிறோம்.

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.08 15:14:55 +0530

6. தாவா சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு என் தகப்பனாா் மற்றும் அவருடன் பிறந்தவர்கள் 18.12.1970ம் தேதியில் விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அதன் பின்னீடு 1ம் பிரதிவாதி தனது மனைவியான 3ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களை பொறுத்து 24.12.1970ம் தேதி இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் 3ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை பொறுத்து வருவாய்த்துறை ஆவணங்களை தன் பெயரை மாற்றிக்கொண்டு அனுபவத்திலிருந்து வந்ததாகவும் அவர் இறப்பிற்கு பின்னீடு அவரது வாரிசுகள் மேற்படி சொத்துக்களை அனுபவம் செய்து வருவதாகவும் சொன்னால் சரியல்ல.தாவா சொத்துக்களை அனுபவம் செய்வது தொடர்பாக சாகுபடி அடங்கலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என் தகப்பனாருக்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் தாவா சொத்து எனக்கும் என் தகப்பனாருக்கும் பாத்தியம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:</u> இல்லை.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.10.08 15:15:01 +0530